KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# தென் ஆசியாவில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைகள்

**S.M. Aliff**
Head / Senior Lecturer
Dept. of Political Sciences
Faculty of Arts & Culture
South Eastern University of Sri Lanka

## அறிமுகம்

அரசியல் அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு என்பன பற்றிய எண்ணக் கருக்கள் வரையறுப்பதற்கு மிகவும் கடினமாக இருப்பதுடன் அவை ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் வேறுபட்ட வடிவங்களில் விளக்கமும் கொடுக்கப்பட்டுள்ளது. மெய்யியலாளர்களின் கருத்துப்படி ஒருமையான சமூகத்தின், அல்லது பல்லினச் சமூகத்தின் அங்கத்தவர்களிடையே நெருக்கமான பரஸ்பர தங்கியிருத்தல் பற்றிய விஞ்ஞான செயன்முறையே ஒருமைப்பாடு எனக் கூறுகின்றார். ஆகவே ஒருமைப்பாடு எனும் போது சமூகத்தை வழிமுறைப்படுத்தும் செயன்முறை (Process) ஒற்றுமையடைந்த சமூகம் என்ற இலக்கையும் குறிப்பதாகும். இதில் அரசியல் ஒருமைப்பாடு எனும் போது ஒழுங்கு படுத்தப்பட்ட ஒரு அரசியல் அதிகார முகவர் அல்லாத அரசாங்கம் இந்தவழிமுறையில் வகிக்கும் பங்கு என்றே பொருள் கொள்ளப்படுகின்றது. தேசிய ஒமைப்பாடு எனும்போது சமுதாயத்தை அல்லது சமூகத்தைப் பிரிவினைப்படுத்தும் முரண்பாடுகளை நீக்குவதைக் குறிக்கின்றது. ஆனால் அங்கு முரண்பாடற்ற சமூகம், ஒருமைப்பாடுடைய சமூகம் என்று கூற முடியாது. ஆகவே முரண்பாடுகளைத் தீர்த்தல் மட்டுமல்ல ஒற்றுமையை அபிவிருத்தி செய்வதனையும் ஒருமைப்பாடு வேண்டி நிற்கின்றது. பிரச்சனைகளை ஏற்படுத்துகின்ற பிணக்குகளில் இணக்கம் ஏற்படுத்துகின்ற போது ஒருமைப்பாட்டுக்கான வழிமுறை ஏற்படுகின்றது. இக்கட்டத்தில் போட்டியிடுகின்ற நலன்களுக்கிடையே இணக்கம் ஏற்படுத்துகின்ற முடிவிற்கு கொண்டுவருவதனை ஒருமைப் பாடு குறித்து நிற்கின்றது. ஆகவே ஒருமைப்பாடு என்ற சொல் இயல்பாகவே நடை முறையில் இருப்பதாகவே கொள்ளப்படுகின்றது. முறையாக தொடர்புகள் வாயிலாக பிரிந்திருக்கும் பகுதிகளுக்கும், முழுமக்களுக்குமிடையே இணக்கம் ஏற்படுத்தி ஒன்றுபடுவதனைக் குறிக்கின்றது. Myron Weiner என்பவர் ஒருமைப்பாடு பற்றியும், ஒருமைப்பாட்டின் பல்வேறு வடிவங்கள் பற்றியும் கருத்துரை வழங்கியுள்ளார். அவற்றுள் தேசிய ஒருமைப்பாடு பற்றிக் குறிப்பிடும் போது சமூக, கலாசார ரீதியாக வேறுபட்ட குழுக்களுக்கிடையே தேசிய அடையாளத்தை ஏற்படுத்துவதிலும் அவர்களை ஒரு பிரதேச அலகுக்குள்ளும் கொண்டு வருவதற்குமான ஒரு ஒழுங்கு முறையென்றார். இது சமூக ரீதியில் பன்முகப்படுத்தப்பட்ட சமூகத்தைக் குறிப்பதுடன் அவர்களுக்கிடையே பரஸ்பரம் தங்கியிருத்தலையும் ஏற்படுத்துவதைக் குறிப்பதாக அமைகிறது.

தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினையானது 18ஆம் நூற்றான்டுகளில் இருந்து முக்கியத்துவம் பெறுவதுடன் ஐரோப்பாவின் தேசிய அரசுகளின் தோற்றம் அந்நாடுகளின் பன்மைப்படுத்தப்பட்டிருந்த மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் எத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றதோ அதற்குச் சமமான பல சவால்களை எதிர் கொண்டன. தற்போதைய புதிய அரசுகள் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் எத்தகைய சவால்களை எதிர் கொள்கின்றனவோ அதற்குச் சமமான சவால்களை அந்நாடுகள் ஆரம்பத்தில் எதிர்நோக்கிய போதும் ஒரு பரந்துபட்ட காலப் பகுதிக்குள் தேசிய ஒருமைப்பாடு வழிமுறையினூடாக

தேசத்தைக் கட்டியெழுப்புவதில் அந்நாடுகள் வெற்றி பெற்றன. ஆனால் புதிதாக சுதந்திரமடைந்த நாடுகள் சுமார் கடந்த 50 வருட காலத்தினுல் இவற்றினை அடையப் பெறுவதினுள் பாரிய நெருக்கடிகளை எதிர் கொண்டதுடன் இவற்றினால் அடையப் பெற்ற பல பாதகமான விடயங்கள் அந்நாடுகளின் அரசியல் அபிவிருத்தியை பெருமளவிற்கு மட்டுப்படுத்தியும் வந்துள்ளன.


ஒருமைப்பாட்டுப் பிரச்சனை என்பது புதிய அரசுகள் தோற்றம் பெறவந்தபோது உருவாகிய பிரச்சனையாகும். இந்நாடுகள் காலனித்துவவாதிகளின் அடக்கு முறையின் கீழ் உருவாக்கப்பட்ட நாடுகளாகும். அங்கு வாழ்ந்த மக்கள் சமூக ரீதியில் பன்மைத் தன்மை கொண்டவர்களாக காணப்பட்டதுடன் அப்பன்மைத்தன்மையை கருத்திற் கொள்ளாமலே காலனித்துவாதிகளின் ஆட்சிமுறை காணப்பட்டது. இவ்வாறான பன்மைத்தன்மையை கவனத்தில் எடுக்காமல் மேற்கொள்ளப்பட்ட சமூக, பொருளாதார மற்றும் நிருவாக நடவடிக்கைகள் காலனித்துவவாதிகளுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் ஒன்றுபட வழிவகுத்தது. இச்சமூகத்தவர்களிடையே எழுச்சியடைந்து வந்த தேசியவாதமானது காலனித்துவ வாதிகளை எதிர்ப்பதாக மட்டும் பொது உடன்பாடு காணப்பட்டதே ஒழிய வேறு எந்தவகையிலும் இச்சமூகத்தவர்களிடையே ஒற்றுமை காணப்படவில்லை. இதனை காலனித்துவவாதிகளுக்கு எதிராக தேற்றம் பெற வந்த ஆசிய, ஆபிரிக்க தேசியவாதப் போராட்டங்களை ஆராயும் எவரும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். ஆதலால் சுதந்திரத்துக்குப் பின்னர் உதயமாக வந்த தேசிய அரசானது, மத, கலாசாரா, மொழி, இன ரீதியில் ஒருமைப்பாடுடைய அரசாக கட்டியெழுப்பப்படவில்லை.

ஆனாலும் இந்நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட நவீனத்துவ மாதிரிகள் காலப்போக்கில் குறுகிய தேசியவாதத்தையும் கலாசாரப் பெறுமானங்களையும் அழித்து விடும் என எதிர்பார்க்கப்பட்டது. நவீனத்துவக் கோட்பாட்டின்படி ஒருநாடு நவீனத்துவத்தை நோக்கிய நகர்வில் கலாசாரமும் உப கலாசார முறையும் முக்கியத்துவத்தை இழந்து விடும் என எதிர்பார்க்கப்பட்டதுடன் குறுகிய காலப்போக்கில் நாட்டுப்பற்றற்றவர்களாகவும் மாறிவிடும் என எதிர்பார்க்கப்பட்டது. இவற்றை மாற்றுவதில் நவீனத்துவத்தின் பண்புகளான கைத்தொழில்மயமாக்கல் பொதுச் தொடர்புசாதனங்களின் வளர்ச்சி, சமூக ஒன்று திரட்டல் (Mass mobilization) என்பன மிகக் கூடியளவிற்கு பங்காற்றும் என எதிர்பார்க்கப்பட்டன. ஆனாலும் புதிதாக சுதந்திரம் பெற்ற நாடுகள் பழமையில் வேரூன்றிய நாடுகளாக இருப்பதுடன் அவர்கள் தமது மதம், இனம், கலாச்சாரம் என்பனவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தன. அதனால் இவற்றை அடைவதில் 3ஆம் உலக நாடுகள் எதிர்பார்த்த வெற்றியைப் பெறவில்லை. பொதுவாக புதிய அரசுகளில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சனை ஒரு சவாலாக இருப்பதுடன் தென்னாசியா இன்றும் கூட அரசியல் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்ற ஒரு காரணியாகவும் தேசிய ஒருமைப்பாடு காணப்படுகின்றது.

**தென்னாசிய சமூகக் கட்டமைப்பு**

தென்னாசிய பிராந்தியத்தினை அவதானித்தால் அது எட்டு நாடுகளைக் (இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், மாலைதீவு, நேபாளம், ஆப்கானிஸ்தான்) கொண்ட ஒரு பகுதியாக இருப்பதுடன் பல்லின சமூக அமைப்பைக் கொண்டும் காணப்படுகின்றது. இதன் சனத்தொகை 1.7 பில்லியன் ஆகும். இவ்வகையில் இனங்காணப்படும் ஒவ்வொரு நாடும் தனக்கே உரித்தான பல பொதுவானதும் சில சிறப்பான பண்புகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. குறிப்பாக உலகின் பிரதான மதங்களான இந்து, முஸ்லிம், பௌத்தம், கிறிஸ்தவம் மற்றும் சீக்கிய மதங்களைப் பின்பற்றுவோர் இங்கு வாழ்கின்றனர். உலக சனத்தொகையில் இருபது வீதமானோர் இங்கு வாழ்வதுடன் இப்பிரதேசமும் இங்கு வாழும் மக்களும் பொருளாதார ரீதியாக பல பின்னடைவுகளைக் கொண்டுள்ளதுடன் பெருமளவிற்கு உலகின் சனத்தொகையுடன் சுமார் 40 வீதமான மக்கள் வறுமையில் வாடுவது போல தென்னாசிய மட்டத்தில் சுமார் 40க்கும் மேற்பட்டோர் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்வதுடன் இப்பகுதியில் வேறு சில நாடுகளில் வறுமை நிலையை

நோக்கும் போது 50 வீதத்தையும் தாண்டி விடுகின்றது.




(மூலம்: http://www.cotf.edu/earthinfo/sasia/SApeo.html)

இந்நாடுகளில் பெரும்பாலானவை ஒரு குறிப்பிட்ட காலம் வரை அந்நியர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்தமையை இங்கு கூடுதலாக கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயமாக இருப்பதுடன் இவர்களின் செல்வாக்கும் தமது ஆட்சியைக் கொண்டு நடாத்துவதற்கு கைக் கொண்ட வழிமுறைகளும் இப்பிரதேசத்திலும் இந்நாடுகளிலும் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியில் பல பாரிய பாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதுடன் அவற்றின் பலாபலன்களை இன்றும் அனுபவிக்கும் நாடுகளாகவும் அவை காணப்படுகின்றன.

தென்னாசிய பிராந்தியத்தின் எட்டு நாடுகளும் வேறுபட்ட ஆட்சி முறைகளைப் பின்பற்றி வருகின்றன. அந்தவகையில் இந்தியா - மாதச்சார்பற்ற சமதர்மக் குடியரசாகவும், இலங்கை - நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையுடைய ஒற்றையாட்சி அரசாகவும், பாகிஸ்தான் - இஸ்லாமியக் குடியரசாகவும், மாலைதீவு - குடியரசு முறையும், ஆப்கானிஸ்தான் - இஸ்லாமியக் குடியரசாகவும், பூட்டான் - மன்னராட்சியுடையதாகவும், நேபாளம் - மதச்சார்பற்ற சமஷ்டிக் குடியரசாகவும், பங்களாதேஷ் பாராளுமன்ற ஜனநாயகமாகவும் காணப்படுகின்றன. அந்தஅடிப்படையில் தென்னாசியா ஒற்றையாட்சி, சமஷ்டி, மன்னராட்சி, இராணுவ ஆட்சி, பாராளுமன்ற ஆட்சி, ஜனாதிபதித்துவ முறை, குடியரசு முறை எனப் பலதரப்பட்ட ஆட்சி முறைகளையுடைய நாடுகளைக் கொண்ட பிராந்தியமாகும்.

மேலும் கல்வி சுகாதாரம் ஆரோக்கிய மட்டம் மற்றும் ஏனைய விடயங்களிலும் அப்பகுதி மக்கள் மேற்கத்தேய நாட்டவர்களுடன் ஒப்பிடும் போது மிகவும் கீழ் மட்டத்தில் இருப்பதுடன் இவற்றை உயர் மட்டத்திற்குச் கொண்டு செல்வதில் இந்நாடுகள் கடுமையான முயற்சிகளை மேற்கொண்ட போதும் குறிப்பிட்ட இலக்கை அடைவதில் இன்றும் கூட போராடிக் கொண்டேயிருக்கின்றன.

அட்டவணை - 01

தென்னாசிய நாடுகளின் எழுத்தறிவு வீதம்

| **நாடுகள்** | **எழுத்தறிவு வீதம் (%)** |
|---|---|
| மாலைதீவு | 99 |
| இலங்கை | 98 |
| இந்தியா | 74.4 |
| நேபாளம் | 66 |
| பங்களாதேஷ் | 57.7 |
| பாகிஸ்தான் | 55 |
| பூட்டான் | 52.8 |
| ஆப்கானிஸ்தான் | 28.1 |

(மூலம்: http://pakmcqs.com/general_knowledge_mcqs/which-saarc-member-country-has-largest-literacy-rate)

**தென்னாசியாவில் தேசிய ஒருமைப்பாட்டுப் பிரச்சினைகள்**

தென் ஆசிய நாடுகள் பல முறைகளைக் கொண்ட பாரிய நெருக்கடிக்களில் சிக்கிக் கொண்டு இருப்பதுடன் கடந்த சுமார் 50 ஆண்டு காலமாக தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் கைக்கொண்ட வழிமுறைகள் எதிர்பார்த்த வெற்றியை மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பெற்றுக்கொண்டன. இவை

மத்திய அரசாங்கத்தினாலும் மற்றும் மாநில அரசுகளினாலும் பின்பற்றி வந்த அரசியல் மற்றும் சமூக பொருளாதாரக் கொள்கையின் கூட்டு மொத்த விளைவாகும். இந்தக் கொள்கைகள் அந்நாடுகள் கைக் கொண்ட பொருளாதார கொள்கையினாலும் மறுபுறம் பிரிட்டிஷ்காரர்கள் அன்றைய தென்னாசியாவை தமது வசதிக்கேற்ப பின்பற்றி வந்த சமூகப் பிரச்சினைகளை மத அடிப்படையிலான, இன அடிப்படையிலான அணுகுமுறையில் நோக்கும் முறையினாலும் மற்றும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஆட்சியாளர்களின் சுயநல தீர்க்கதரிசனமற்ற கொள்கையினாலும் இவை ஏற்பட்டன என்றால் மிகையாகாது. சுதந்திரத்தை அடுத்து இக்கொள்கைகள் நாட்டினைப் பொருளாதார அடிப்படையில் செழிப்படைய வைப்பதற்காகவும் கல்வி வாய்ப்பினைப் பெருக்குவதற்கும் வறியோர் - செல்வந்தருக்களுக்கு இடையிலான இடைவெளியை நிரப்புவதற்கும் அவசியமானவை எனக் கருதப்பட்டன. ஆனால் இவற்றிற்கு மாறாக இன்றைய தென் ஆசியா உலகின் மிக வறிய நாடுகளைக் கொண்ட பிராந்தியமாகவும் மொத்த தேசிய உற்பத்தியிலும் மானிட அபிவிருத்திக் குறிகாட்டியிலும் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே உள்ளது. அத்துடன் மொத்தக் குடித்தொகையில் அரைவாசிப்பேர் இன்னமும் எழுத்தறிவற்றவர்களாகவும் உள்ளனர். அந்தவகையில் தென்னாசியாவில் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் காணப்படும் பிரச்சினைகளைப் பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

**காலனித்துவ ஆட்சியின் தாக்கம்**

பிரிட்டிஷ் ஆட்சியாளர் தமது ஆட்சிக்கு உரம் ஊட்டும் வகையில் மேற்கொண்ட முயற்சிகளும் பன்மைச் சமூகத்தை மேலும் சிதறடிப்பதற்கு வழிவகுத்தது. இந்தவகையில் மதச் சிறுபான்மையினரிடம் இருந்தும், இந்தியாவில் பிராமண இந்துச் சமூகக் கட்டமைப்பில் தாழ்ந்த சாதிகள் எனக் கருதப்பட்ட மக்கள் பிரிவினதும் ஆதரைவப் பெறும் நோக்கில் ஓர் ஒழுங்கு முறையில் ஒரே நாட்டவரைப் பிரித்து அவர்களை தங்களுக்குள் மோதவிடும் நோக்கில் நுணுக்கமான முறையில் பிரித்தானியர் கொள்கைகளை வகுத்தனர். உதாரணமாக 1909 இல் இந்திய கவுன்சில் சட்டத்தில் கீழ் முஸ்லிம்களுக்கென தனியான தேர்தல் தொகுதிகள் உருவாக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். சுதந்திரத்தின்போது இந்தியா, பாகிஸ்தான் என்ற இரு அரசுகளை உருவாக்கியமை இந்து – முஸ்லிம் பிரிவினைக்கான பலமான அடித்தளத்தை ஏற்படுத்தியது. அத்துடன் கஷ்மீர் தொடர்பான முடிவுகள் வழங்கப்படாமையும் குறிப்படத்தக்க விடயமாகும்.

இதேபோல இலங்கையில் இன அடிப்படையில் பிரதிநிதித்துவத்தை வழங்கியமை என்பனவற்றைக் குறிப்பிடலாம். ஆனால் பிற்பட்ட காலப்பகுதியில் அவை இனங்களுக் கிடையே மோதலைத் தோற்றுவித்ததுடன் அது இனவகுப்புவாத வன்செயல்களையும் தோற்றுவித்தது. அவ்வாறே அவர்களின் பிரித்தாளும் கொள்கையானது சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தனித்தனியான கோரிக்கைகளை முன்வைக்கும் அளவிற்கு இலங்கை தலைவர்களை வழிப்படுத்தியமை தென்னாசிய நாடுகளில் பிரித்தானியர் ஒரமைப்பாட்டை சீர்குலைத்தமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

**சாதிக்கட்டமைப்பு**

தென் ஆசியா மட்டத்தில் முக்கியமாக இந்தியாவில் சாதி என்பது தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தடையாக இருப்பதுடன் மதத்தைப் போலவே பிரிவினைக் காரணியாகவும் இருந்து வருகிறது. இந்தியாவைப் பொறுத்தவரை பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் பிராமணர் அல்லாத இந்து மதத்தைச் சேர்ந்த உயர்ந்த பொருளாதார நிலையில் இருந்த உறுப்பினர்களுக்கு ஆதரவு அளித்ததுடன் சாதி வகுப்பு முறையைத் தூண்டியும் வந்துள்ளனர். இந்தியா சுதந்திரம் அடைந்த பின்னர் சமத்துவம், பாராபட்சமற்ற நிலை என்பனவற்றுக்கான அடிப்படைகளை மீறும் செயல் என்ற முறையில் சாதி அடிப்படையிலான முன்னுரிமைச் சலுகைகளை நீக்கியது. ஆனாலும் தாழ்த்தப்பட்ட சாதியினர் தொடர்ந்தும் தாம் அரசியல், பொருளாதார நிலைமையில் பின்னிலையில் இருப்பதாகவும் அவற்றை முன்னேற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்தபோது இவற்றினைப் பரிசீலிப்பதற்காக “மன்டல் கமிஷன்” ஐ

நியமித்தது. இதன்படி அவர்களுக்கு அரசசேவை வாய்ப்புக்களிலும் மற்றும் உயர்கல்வி போன்றவற்றிலும் இடஒதுக்கீடு செய்ய வேண்டுமென இக்குழு சிபாரிசு செய்ய வேண்டுமென இக்குழு சிபாரிசு செய்தபோதும் இச்சிபாரிசுகள் பல ஆண்டுக்குப் பின்னர் செயற்பட வந்த போது வட இந்தியாவில் பரவலான உயர் இந்து பிராமணர்களின் எதிர்ப்பையும் ஆர்ப்பாட்டத்தையும் வன்முறைகளையும் துாண்டி விட்டது. இது அரசியல் ஸ்திரப்பாட்டிற்கு பாரிய அச்சுறுத்தலாக இருந்ததுடன் சமூக ஒழுங்கமைப்பிலும் சீர்குலைவை ஏற்படுத்தியது.

இந்தியாவில் சாதி ரீதியிலான கட்சிகள் தோன்றியிருப்பது ஒருமைப்பாட்டுக்கு சவாலாகக் காணப்படுகின்றது. சட்ட ரீதியாக சாதிக்குழுக்களுக்கு ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ள நிலையிலும் நடைமுறையில் சீரானதாக அமையவில்லை. சாதிக்குழுக்களின் ஏனைய சாதிகள் மீதான புறக்கணிப்பும் ஜனநாயகத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. அத்துடன் சாதி வன்முறைகள் இந்தியாவின் கண்டுபிடிப்புக்கள் மற்றும் வளர்ச்சிக்குப் பாதகமாகக் காணப்படுகின்றன.

**பல்லின மதங்களும் மத ரீதியிலான வன்முறைகளும்**

தென் ஆசிய சமூகங்களில் மதம் என்பது மிகுந்த செல்வாக்கு செலுத்துவதாக இருப்பதுடன் மக்களின் விலாசத்திற்கு உரியதொன்றாக விளங்குகின்றது. பல வருட காலமாகவே மத ரீதியாக மோதல்களை தென்னாசிய நாடுகள் எதிர்நோக்குவதுடன் மதங்களுக்கிடையிலான மோதல்கள் அரசியல் கட்சிகளினால் தீவிரப்படுத்தப்பட்டும் வருகின்றன. இவர்கள் மத ஆர்வத்தினாலோ, மதச்சார்பின்மை குறித்த அக்கறையினாலோ இதனைச் செய்வதில்லை. தேர்தலின் போது குறிப்பிட்ட சமூகங்களிருந்து வாக்குகளைக் கவர்ந்து கொள்ளும் நோக்கிலேயே அவ்வாறு செய்கின்றனர். முக்கியமாக இந்தியாவில் இந்து, முஸ்லிம் கலவரங்கள் அடிக்கடி இடம்பெறுவதுடன் அது தேசிய எல்லையைக் கடந்து செல்வதனால் வெளிவாரியான பரிமாணங்களையும் பெற்றுவிடுகிறது. இதனால் நாட்டிற்குள் இனப்பிளவுகள் அதிகரித்துவருவது மட்டுமல்லாது இந்தியாவில் வட பகுதியில் பல பிரிவினைவாதப் போக்குகளுக்கும் முகங்கொடுத்து வருகிறது.

இங்கு இலங்கையும் இந்தியாவும் பன்மதங்களைக் கொண்டவையாகும். எனினும் பாகிஸ்தான் பங்காளாதேஸ், நேபாளம் என்பன தனி மத்தைக் கொண்டனவாக கருதப்பட்டாலும் அவற்றுக்குரிய மதங்களுக்குப் புறம்பான ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்களும் காணப்படுகின்றனர். தென் ஆசியப் பிராந்தியத்தில் ஏனைய நாடுகளாகக் கருதப்படும் நேபாளம் பூட்டான் ஆகிய நாடுகளில் முன்னாள் நேபாளத்தில் இந்துமதம் அரச மதமாகக் காணப்பட்டதுடன அங்குள்ள சிறுபான்மையினரின் அதிருப்தியை (முக்கியமாக பௌத்தர்களின்) பெற்றுள்ளது. அவ்வரசு பன்மத அரசொன்றாக மாற்றப்பட வேண்டுமென வேறு மதத்தவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இக்கோரிக்கை நிறை வேற்றபட்படாவிடின் எதிர் காலத்தில் இங்கு மதப் பூசல்கள் தலை துாக்கலாம் என எதிர்வுகூறபப்ட்டது. தற்போது அண்மையில புதிய அரசியலமைப்பில் நேபாளம் மதச்சார்பற்ற அரசாக உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மறுபுறம் பூூட்டானில் முடியாட்சி பௌத்த மதத்திற்கு அளித்துவரும் முக்கியத்துவம் அது ஏனைய மதத்தவர்களின் எதிர்ப்புக்கு இலக்காகியுள்ளது. பௌத்த கலாசாரத்தை மேம்படுத்துவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி நேபாள இந்துக்களின் எதிர்ப்பை உருவாக்கியுள்ளதுடன் வறிய நிலையில் உள்ள அந்நாட்டில் அரசியல் அமைதியின்மைக்கும் இட்டுச் செல்கின்றது. இதே நிலைமையே இலங்கையிலும் காணப்படுகின்றது. ஏற்கனவே பல்மத இயல்புகளைக் கொண்டுள்ள தெற்காசிய சனத்தொகை அங்குள்ள மதங்கள் மேலும் பல பிரிவுகளாகவும் துணைப்பிரிவுகளாகவும் காணப்படும் போது மிகுந்த சிக்கலுக்கு இடமளிக்க முற்படுகின்றது. அதன் விளைவாக ஒரே சமயத்திற்குள்ளேயே பதற்ற நிலை தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது.

தென் ஆசிய நாடுகளில் இஸ்லாமியக் குடியரசான பாகிஸ்தானில் இந்துக்களுக்கு எதிராக பலாத்காரம் கட்டவிழ்த்து

விடப்பட்டாலும் அதனை விட சஞ்சலம் தரக் கூடிய விடயம் ஒரே மதத்தின் வெவ்வேறு பிரிவினருக்கிடையே சகிப்புத் தன்மையில்லாது இருப்பதாகும். இதுவிடயத்தில் முஸ்லிம்களின் இரு பிரிவுகளான ஷியாக்கள், பெரும்பான்மை எண்ணிக்கையான சுன்னிக்கள் (Sunnis) பிரிவினர் மதத்திலான வேறுபாடு பல முறை அந்நாட்டு வன்முறைக்கு இலக்காகி உள்ளதுடன் இதன் விளைவாக பல நூறு பேர்கொல்ப்படவும் பல கோடிக்கனக்கான சொத்துக்கள் அளிக்கப்படவும் காரண மாகியது. ஆகவே பாகிஸ்தான் பங்களாதேஸ் பூட்டான் நேபாளம் ஆகிய நாடுகளில் ஏனைய மதங்களும் நிலவியிருக்கும் ஒரு சூழலில் ஒரு மதத்தினை அரச மட்டத்தில் பேனுவதன் மூலம் இந்நாடுகளின் தேசிய ஒருமைப்பாடு அபாய நிலைக்குள் சிக்கியிருப்பதையும் நன்கு தெளிவுபடுத்துகிறது எனலாம்.

தென் அசியாவில் பெரிய நாடான இந்தியா மதச்சார்பின்மைக் கோட்பாட்டைப் பின்பற்றினாலும் சமயக் கலவரங்களில் இருந்து தப்பிவிடவில்லை. இந்தியாவில் பல பாகங்களிலும் இந்து முஸ்லிம் முரண்பாடுகள் வெகு சகஜமானவை என்பதுடன் ஒன்றுக்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் அவை கலகங்கலாக வெடித்துள்ளன. சமீபகாலத்தில் இந்தியா பன்மதத் தன்மைக்கு அபாயமேற்பட்டுள்ளதுடன் தேசியவாதப் போர்வையில் இந்து சமய வகுப்புவாதம் வளர்க்கப்பட்டும் வருகின்றது. பாரதீய ஜனதாக் கட்சியினால் வழிநடாத்தப்படும் இந்த வகுப்புவாதமானது இந்தியாவின் அரசியலமைப்பிலான மதச்சார்பின்மைக் கொள்கையை பெரும் அச்சுறுத்தலுக்குள்ளாகியிருப்பதுடன் அது நாட்டின் அரசியல் ஸ்திரப்பாட்டை ஆட்டம் காணச் செய்து அரசியல் அபிவிருத்தியில் முட்டுக் கட்டைகளையும் ஏற்படுத்துகிறது.

இலங்கையில் சுதந்திரகால கட்ட ஆரம்பத்தில் மதச்சார்பின்மைக் கொள்கை பின்பற்றப்பட்ட போதும் 1956க்குப் பின்னர் பௌத்தத்திற்கு அளிக்கப்பட்டு வந்த முன்னுரிமை வகுப்புவாத நெருக்கடியைத் தோற்றுவித்ததுடன் பௌத்த - இந்து (சிங்களவர் - தமிழர்) முரண்பாட்டினையும் ஏற்படுத்தியுள்ளது. பின்னர் அது நாடு பிரிவினையை நோக்கிய நகர்வுக்கும் இட்டுச் சென்று இனங்களுக்கிடையே ஓர் இணக்க நிலையை கொண்டுவருவதில் பெரும் சவால்களை ஏற்படுத்தின. இப்பிணக்கைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட தெரிவுகள் மாத்திரமே காணப்படுகின்றன. இதனால் இலங்கையின் தேச நிர்மாணப் பணி பின்னடைவை எதிர்நோக்கியுதுள்ளதுடன் இன்றும் கூட அவற்றின் பலாபலன்களை அனுபவித்துக் கொண்டும் உள்ளது. யுத்தத்திற்கப் பின்னரான இலங்கையில் மத ரீதியான வன்முறைகள் தேசிய ஒருமைப்பாட்டைக் கேள்விக்குட்படுத்தியுள்ளன.

**சமமற்ற சனத்தொகைப் பரம்பல்**

சனத்தொகை அடிப்படையில் உலகின் சனத்தொகை 1/5 பகுதி மக்களைக் கொண்ட பிராந்தியமாக தென் ஆசியா காணப்படுவதுடன் கடந்த சுமார் ஐம்பது வருட காலத்தில் இது வரை சந்தித்திராத பலமோசமான நெருக்கடிகளை சந்தித்தும் வருகின்றது. இன்றைய தென் ஆசியாவின் கொந்தளிப்பு சோவியத்தின் சிதைவைப் போலவே மிகுந்த முக்கியத்துவம் உடையதாகும். இதுநாடுகளின் வருங்கால நிகழ்வுகளின் திசைவழியில் நிச்சயமாக தாக்கங்களை ஏற்படுத்தலாம். சமமற்ற சனத்தொகைப் பரம்பல் இந்தியா குறித்து ஏனைய நாடுகளிடம் சந்தேகம் மற்றும் அச்சநிலையை ஏற்படுத்தியுள்ளதுடன் பிராந்திய ஒருமைப்பாட்டிற்கும் சவாலாக உள்ளது.

**பொருளாதாரம்**

வியாபித்து வரும் இந்த அரசியல் பொருளாதார நெருக்கடி ஒப்பீட்டு நேரத்தில் ஒரே நேரத்தில் திடீரென எழுந்த பல கொந்தளிப்புக்களின் ஒரு தொகுப்பாக உள்ளது. சாதி வெறி, மதக்கலவரங்கள், பணவீக்கத்தின் பெருக்கம், பொருளாதாரப் பின்னடைவு, மொழி ரீதியான வேறுபாடு, அரசாங்கம் வங்குரோத்து நிலைமையை அனுபவித்து வந்துள்ளமை, மூர்க்கமான பிராந்திய கிளர்ச்சிகள் ஆகிய அனைத்தும் இந்த நெருக்கடியால் ஒன்று திரண்டு தேசிய ஒருமைப்பாட்டை சிதைத்து விடக்கூடிய அமைப்பினைப் பெற்றுள்ளன. இன்றைய தென் ஆசியா எதிர்நோக்கும் நெருக்கடி சுதந்திரத்திற்குப் பிற்பட்ட அதன் வரலாற்றில்

இதுவரை காலமும் இந்நாடுகள் கண்டிராத ஒன்று என்பதில் ஐயமில்லை.

பொருளாதார முன்னேற்றத்தின் ஊடாக ஒரு நாட்டிற்குள் தேசிய அபிவிருத்தியையும் தேசிய ஒருமைப்பாட்டையும் கொண்டுவர முடியும் என எதிர்பார்த்த போதும் இதுவும் கூட குறிப்பிட்ட இலக்கை அடைவதில் தவறிவிட்டது எனலாம். தேசிய வருமானப் பகிர்வில் காட்டப்பட்ட வேறுபாடு, வேறுபட்ட அபிவிருத்தி மாதிரிகளை ஒரே நாட்டுக்குள்ளே ஏற்படுத்தி வேறுபட்ட பிரதேசங்கள், வேறுபட்ட வாழ்க்கை முறைகளையும் கல்வி, சுகாதாரம், ஆயுள் என்பனவற்றில் ஏற்றத் தாழ்வுகளையும் கொண்டுள்ளன. இதனால் தேசிய வருமானத்தில் கூடிய பங்கைப் பெறும் பிரதேசங்கள் செழிப்பான நிலையை அடைய ஏனைய பிரதேசங்கள் தொடர்ந்தும் கவனிப்பாரற்றும் பின்தங்கிய நிலையிலும் காட்சியளிக்கின்றன.

**வறுமை**

தென் ஆசிய நாடுகள் பொருளாதாரத்துறையில் ஏற்கனவே பாரிய நெருக்கடியொன்றை எதிர்கொண்டுள்ளது. 1980களின் ஆரம்பத்தில் இருந்து இப்பிரதேசங்களில் அறிமுகப்படுத்தப்பட்ட பொருளாதார தாராளமயமாக்கக் கொள்கைகளை அடுத்து இறக்குமதிச் செலவுகள் கண்மூடித்தனமாக அதிகரித்தமையை அடுத்து அந்நியச் செலாவணி ஒதுக்கீட்டில் கணிசமான வீழ்ச்சியினையும் சென்மதி நிலுவையில் பாதகமான தன்மையினையும் ஏற்படுத்தியுள்ளது. இது சமூகத்தில் மேலும் வறுமையை அதிகரித்ததுடன் போசாக்கு மட்டத்தில் மேலும் தீவிரமான பற்றாக்குறையையும் தோற்றுவித்துள்ளது. இதில் முக்கியமாக பங்களாதேஷ் உலகில் மிகவும் வறிய நாடுகளில் ஒன்றாகவும் திகழ்வதுடன் உலக வங்கியின் அறிக்கைப்படி உலகில் வறிய நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தையும் பிடித்துக் கொள்கின்றது. இக்காரணங்களினால் இந்நாட்டின் சனத்தொகையில் 2/3 பகுதி மக்கள் வறுமைக் கோட்டிற்கு கீழேயும் வாழ்கின்றனர். பங்களாதேஷின் தேசநிர்மாணம் தேசநிர்மாணப் பகிர்வுக்கும் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் தடையாக பொருளாதார ரீதியாக அது பெற்றிருக்கும் அதி கூடிய பின்தங்கிய நிலை ஏனைய தென் ஆசிய நாடுகள் எதிர்நோக்கும் சவால்களைவிட பயங்கரமானதாகவும் காணப்படுகின்றது.

**பாராபட்சமான அபிவிருத்தி**

குறிப்பிட்ட பிரதேசங்களில் வாழும் கவனிப்பாரற்ற சிறுபான்மையினர் அரசியல் முறைமையில் வைத்திருந்த நம்பிக்கை இதன் மூலம் சிதறடிக்கப்பட்டதுடன் அரசியலில் அந்நியமயமாகவும் முறைப்பட்டதனால் அரசியல் ஒருமைப்பாடு தோல்வியில் முடிவடைந்தது. உதாரணமாக இலங்கையில் இலங்கைத் தமிழர்களுக்கு பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார ரீதியில் காட்டப்பட்ட பாரபட்சமானது அவர்களை இலங்கை அரசுக்கு தொடர்ந்தும் வழங்கி வந்த ஆதரவினை விலக்கிக் கொள்ளக் காரணமாகியது. இதே போல இந்தியாவில் சீக்கியர்களின் காலிஸ்தானுக்கான கோரிக்கையை இந்தியா நிராகரித்தபோது அவர்கள் இந்தியாவிற்கு வழங்கி வந்த ஆதரவினை விலக்கிக் கொண்டதனையும் கூறலாம். இதனால் அரசியல் அபிவிருத்தியில் முக்கிய பண்பாகக் கருதப்படும் மக்களை ஒன்று திரட்டும் (Mass Mobilization and Participations) நடவடிக்கையும் மக்கள் பங்குபற்றுதலும் பெருமளவிற்கு வீழ்ச்சியடைந்ததுடன் ஒரு தொகுதி மக்கள் ஒரு அரசியல் கட்டமைப்பிலிருந்தும் தங்களை விலக்கிக் கொண்டனர்.

**வன்முறையும் பயங்கரவாதமும்**

பிரிவினைவாதமும் பயங்கரவாதமும் அரசியல் அபிவிருத்தியைப் பாதிக்கும் மற்றுமொரு காரணியாகும். இலங்கையின் வடபகுதியிலும் இந்தியாவின் பஞ்சாப் காஷ்மீர் மற்றும் அஸாம் போன்ற பகுதியிலும் பங்களாதேஸின் சிட்டாக்கொங் பிரதேசத்திலும் அத்துடன் பாகிஸ்தானில் சில பகுதிகளிலும் அதிகரித்து வரும் பிரிவினைவாதப் பயங்கரவாதமானது இந்நெருக்கடியை வேறு வடிவங்களில் கொண்டு வந்துள்ளது எனலாம். அதேவேளை தென் ஆசியாவில் பல பாகங்களிலும் பயங்கரவாத நடவடிக்கைகள்

பெருகிவருகின்றன. ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் அனைத்தும் பயங்கரவாதம் நிலை கொண்டுள்ள நாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டன. இப்பிரிவினைவாதப் போக்கினை கட்டுப்படுத்துவதற்காக எடுக்கும் இந்நடவடிக்கைகள் மூலம் தேசத்தின் ஒரு பகுதி மக்கள் அரசியலில் இருந்து அந்நியமயமாக்கப்படவதுடன் தேச நிர்மாணப் பணியும் பின்னடைவை எதிர்நோக்குகிறது. மேலும் இந்நாட்டின் அரச பயங்கரவாதமும், மிருகத்தனமான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை எதிர்த்து நிற்கும் இயக்கங்கள் கணிசமான மக்கள் ஆதரவையும் பெற்றுக் காணப்படுவதனால் இப்போராட்டங்கள் மக்கள் ஆதரவினை வெளிச்சமிட்டுக் காட்டுவதாக அமைகின்றன. இந்நிகழ்வுப் போக்கு பெருமளவு தென்னாசிய அரசாங்கங்களில் அரசியல் தலைமையில் இருந்தவர்கள் குறுகிய அரசியல் இலாபம் கருதி மேற்கொண்டு வந்த துாரநோக்கற்ற தவறான நடவடிக்கைகளே காரணமாகும். அடிப்படையில் ஆக உயர் மட்டத்தில் நிகழ்ந்த அரசியல் தவறு காரணமாகவே இவ்வாறாக பிரிவினைவாதப்போக்குகள் தலைதுாக்கிதாகும். இப்பிரச்சினைகளுக்கான தீர்வு நிருவாக வழிமுறையின் மீது தங்கியிராமல் அரசியல் பேச்சு வார்த்தைகளை மீண்டும் துவக்குவதன் மூலமும் அதனை எடுத்து நீண்ட காலமாக இடை நிறுத்தப்பட்டிருக்கும் ஜனநாயகத் தேர்தல்களை இப்பகுதியில் நடத்துவதன் மூலம் மட்டுமே இப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு தேசிய ஒருமைப்பாட்டினைக் கொண்டு வரமுடியும்.

தொடர்ச்சியாக வளர்ந்து வரும் வன்முறை அவை நாட்டைப் பீடிக்கின்ற பல பரிமாணங்களிலான நெருக்கடிகளின் ஒரு நோய்குறியாக இருந்தாலும் உலகில் மிகப் பெரிய ஜனநாயக நாடான இந்தியாவிலும் மிகச் சிறிய நாடான இலங்கையிலும் மற்றும் பாகிஸ்தானிலும் தன் எதிரில் வியாபித்துவரும் சவால்களை சமாளிக்க முடியாமல் திணறுகின்ற தன்மையால் ஜனநாயகத்தைக் கட்டியெழுப்பும் வழிமுறையையும் தேசிய அரசைக் கட்டியெழுப்பும் நிர்மாணப்பணியும் மற்றும் இன ஒருமைப்பாட்டுப் பணியும் பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றன.

**உள்நாட்டு அரசியல் குழப்பம்**

அரசியல் அபிவிருத்தி ஏற்படுத்துவதில் உள்நாட்டில் இடம்பெறும் அரசியல் ஸ்திரம் (political stability) முக்கியமானதாகும். பொதுவாக ஸ்திரப்பாடு என்ற விடயம் ஒரு நாட்டிற்கு முக்கியமானதுடன் வெளிவாரியாகவும் இதன் முக்கியத்துவம் அதிகரித்து காணப்படுகின்றது. தென்னாசிய பிராந்தியத்தில் பிரிவினைவாதப்போக்குகள், இன முரண்பாடுகள் ஸ்திரத்தன்மைக்கு பாரிய அச்சுறுத்தலாக இருப்பதுடன் அவ்வரசின் சட்ட ரீதியான தன்மைக்கு ஆபத்தினை ஏற்படுத்துவதாகவும் உள்ளது. குறிப்பாக பாகிஸ்தான், இலங்கை, இந்தியா மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் மேற்குறிப்பிட்டவற்றின் தாக்கம் பாரதுாரமாக இருப்பதுடன் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட இந்நாடுகளில் மாறுபடக் கூடிய சூழ்நிலையானது இன, மத, கலாசார வேறுபாடுகளினாலும் தீவிரமடைகின்றது.

பங்களாதேஷில் இனப்பிரச்சினையானது சிட்டாக்கொங்கில் வாழும் சிறுபான்மையினரும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையிலான பிணக்குகளாகும். இப்பிரதேசத்தில் வாழ்கின்ற மக்கள் பங்களாதேஷில் ஏனைய பிரதேசங்களில் வாழ்பவர்களிடமிருந்து மொழி, கலாசாரம், மதம் என்பனவற்றில் வேறுபட்டுக் காணப்படுவது இதன் அடிப்படையாக இருப்பதுடன் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட பல்வேறுபட்ட மாற்றங்கள் இப்பிணக்குகளின் வேகத்தினை அதிகரித்தது.

இதேபோல் இந்தியாவில் சீக்கியர், காஷ்மீரியர்கள் மற்றும் வடகிழக்கு மாநிலங்களில் வாழும் அசாமியர்களும் நாகாக் கிளர்ச்சிவாதிகளும் பிரிவினைக்காகப் போராடி வருவதுடன் தேசிய ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக விளங்குகின்றனர். இவற்றினை முடிவிற்குக் கொண்டு வர இந்திய அரசு இராணுவம் மற்றும் அரசியல் அமைப்பு ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்த போதும் இப்பிணக்கு இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

பாகிஸ்தானும் இப்பிணக்கில் இருந்து தப்பித்துக் கொண்ட நாடாகக் காணப்படவில்லை. இந்நாட்டின் சில குறிப்பிட்ட நகரங்கள் இப்பிணக்கிற்கு சர்வதேச ரீதியில் பெயர்போன நகரங்களாகக் காட்சியளிக்கின்றன. முக்கியமாக கராச்சி நகர் இப்பிணக்கின் உக்கிரமான கட்டங்களை அண்மைக்காலம் வரை அனுபவித்து வருகின்றது. இது உள்ளாட்டில் அரசியல் ஸ்திரப்பாட்டைப் பாதித்து அரசாங்கங்கள் வீழ்ச்சியுறுவதற்கும் வழியமைத்துள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் பாகிஸ்தானில் வங்காளியர்கள், பஞ்சாபியர்கள், இந்துக்கள், பதானியர்கள் மற்றும் பளுச்சியர்கள் போன்ற இனக்குழுக்களைக் கொண்ட நாடாக விளங்கி வருகின்றது. இவர்களுள் பஞ்ஞாபியர்களுக்கு அரசியல், பொருளாதார சமூக ரீதியில் வழங்கப்படும் முக்கியத்துவம் ஏனையவர்கள் கூடிய சுயாட்சி கோருவதற்கு அல்லது பிரிவினையைக் கோருவதற்கு தூண்டுகின்றது. தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக பாகிஸ்தான் மத்தியமயப்படுத்தப்பட்ட நிருவாகம் மற்றும் அதிகார முறைமையில் இனங்களுக்கிடையே பகைமையையும் பிளவும் தோன்றி பாகிஸ்தானில் அரசியல் அதிகாரத்தையே ஆட்டம் காணச் செய்துள்ளது. 1971இல் கிழக்குப் பாகிஸ்தான் பங்களாதேஷாக பிரிவினையடைந்த பிற்பாடும் மேற்குப் பாகிஸ்தானின் ஆட்சியாளர்கள் அதிலிருந்து படிப்பினைகளைப் பெறாததினால் தொடர்ந்தும் பதானியர்களும் பஞ்சாபியர்களும் மற்றும் இந்துக்களும் பிரிவினையைக் கோருவதுடன் முகாஜிரீன்களும் அவர்களுக்கு எதிராக வன்முறை மற்றும் அவர்களது எதிர் வன்முறையும் அதிகரித்துக் காணப்படுவதினால் ஜனநாயகத்தை மீண்டும் கட்டியெழுப்புவதிலும் இன்றும் கூட பாகிஸ்தான் திணறிக் கொண்டுதான் இருக்கின்றது. முக்கியமாக பாகிஸ்தான் அரசியலிலும் கொள்கை வகுப்பிலும் இராணுவத்திற்கு அளிக்கப்பட்டு வரும் அதிகூடிய முக்கியத்துவமும் உயர் அந்தஸ்தும் ஜனநாயக சீரழிவுக்கு உரமூட்டுவதாக அமைகிறது.

சுதந்திரத்திற்குப் பின்னர் இந்நாடுகளில் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய ஆளும் வர்க்கத்தினர் மேற்கத்தேய மாதிரியான அரசியல் அபிவிருத்தி முறைகளைக் கைக்கொண்டு பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட்டதும் மேற்கத்தேய மாதிரியான சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களை அடைவதில் இந்நாடுகள் இன்னும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. உதாரணமாக பாகிஸ்தானில் முதலாளித்துவ மாதிரியான அபிவிருத்தி முறையை ஏற்படுத்துவதற்காக பொருளாதார முறைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதும் அது பாகிஸ்தானில் செல்வாக்குப் பெற்ற பஞ்சாபியர்களுக்கும் மற்றும் முகாஜிரீன்களுக்குமே சாதாகமானதாகக் காணப்பட்டதனால் அல்லது இவ்வபிவிருத்திகள் இவர்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்திற்குக் கிடைத்தமையினால் பஞ்சாபியர்கள் பொருளாதார ரீதியில் செல்வாக்குப் பெறத் தொடங்கியதுடன் பிரதேசங்களுக்கிடையில் பொருளாதார ஏற்றத் தாழ்வினை அபிவிருத்தி செய்து பிராந்திய வேறுபாட்டையும் துரிதப்படுத்தியது.

**பிரதேசவாதமும் கலாசார அடையாளங்களும்**

தென்னாசியாவில் தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதில் பாதிப்புச் செலுத்தும் அம்சங்களுள் பிரதேசவாதமும் கலாசார அடையாளங்களும் முக்கியமானவை. அந்தவகையில் தென்னாசிய நாடுகளில் காணப்படும் பிரதேச வேறுபாடுகள் அதனை அடிப்படையாகக் கொண்ட மொழி, கலாசாரம், என்பன வேற்றுமையை வலுப்படுத்துவதாக உள்ளன. காலனித்துவ இலங்கையில் கண்டி, கரையோர வேறுபாடும் வேறுபட்ட கலாசாரமும் பாரிய வேறுபாடாக கருதப்பட்டது. அவ்வாறே வடக்கு, கிழக்கு தமிழ் மக்களை அதிகம் கொண்டிருந்தபோதும் அவர்களிடையே வேறுபாடு உள்ளது. வடக்கு தமிழர்கள் ஆதிக்க மனோபாவம் கொண்டவர்களாக கருதப்படுகிறார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை மொழியை அடிப்படையாகக் கொண்டு மாநிலங்கள் ஒழுங்கமைய பெற்றிருக்கின்றன. அதனுடன் சமமற்ற பிராந்திய அபிவிருத்திகள் ஏற்படவும் இப்பிரதேசவாதம் வழியமைத்துக் கொடுத்துள்ளது. பாகிஸ்தான் உருவாக்கத்தின் போது மேற்கு, கிழக்கு என இரு பெரும் பகுதிகளைக் கொண்டதாக காணப்பட்டது. ஆனால் 1970களில் கிழக்குப்

பாகிஸ்தான் மீது காட்டிய பாரபட்சம் பிரதேசவாதத்தாலும் கலாசார அடையாளத்தினாலுமாகும். இது கிழக்கு பாகிஸ்தான் பங்களாதேஷ் என்ற தனிநாட்டை உருவாக்குவதற்கு காரணமாய் அமைந்தது. இவ்வாறு தென்னாசியாவில் காண்படுகின்ற பிரதேசவாதம் ஒரமைப்பாட்டுக்கு சவாலாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

**பழங்குடியினரின் அடையாளம்**

தென்னாசிய நாடுகளில் காணப்படும் பொதுவான பண்பாக பழங்குடியினர் மீது காட்டப்படும் பாராபட்சத்தினைக் குறிப்பிடலாம். இது தேசங்களுக்குள் ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இன்னும் வேறுபாட்டை விரிவுபடுத்துவதாகவே உள்ளது. இன்னொருவகையில் நோக்கின் இது ஜனநாயகத்திற்கு முரணானதாகும். இந்தியாவில் பழங்குடியினர் என்ற வகையில் நாகர், காசி, மைசொ ஆகியோர் காணப்படுகின்றனர். இவர்கள் மிகப் பழைமையான கலாசாரத்தைப் பின்பற்றுபவர்களாக உள்ளதுடன் சமூகத்தில் தாழ்வானவர்களாகவும் கருதப்படுகின்றனர். தங்களது அடையாளத்தை இழப்பது குறித்த அச்சம் அவர்களைப் பல்வேறு போராட்டங்களுக்கு இட்டுச் சென்றுள்ளது. குறிப்பாக நாகர்கள் பிராந்திய சுயாட்சி கோரி நடாத்தும் போராட்டஙகள், இந்துக்களின் நாகலான்டில் சுதந்திரமான இறையாண்மைக் கோரிக்கையைக் குறிப்பிட முடியும். அவ்வாறே பங்களாதேஷில் சிட்டாக்கொங் மலைவாழ் பிரதேச பழங்குடியினரின் போராட்டமும் குறிப்பிடத்கக்கது. இவ்வகையான போராட்டங்கள், ஏற்றத்தாழ்வுகள் தென்னாசியாவில் காலாகாலாமாக காணப்படுவதோடு தேசிய ஒருமைப்பாட்டை எற்படுததுவதிலும் சவாலை ஏற்படுத்துகின்றது.

**அரசியல் கட்சிகளின் செல்வாக்கு**

தென்னாசிய நாடுகளில் மக்களிடையே ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு அந்நாடுகளில் செயற்படுகின்ற அரசியல் கட்சிகளும் பிரதான சவாலாக அமைகின்றன. அதன்படி தேசிய கட்சிகள், பிராந்தியக் கட்சிகள், இன, மத ரீதியான கட்சிகள், சாதிக் கட்சிகள் என்பன இன்று மக்ளிடையே பிரிவினையை ஏற்படுததுவதாகவே உள்ளன. இவை தமது அரசியல் நலன்கருதி மக்களிடையே பிரிவினையைப் பலப்படுத்துகின்றன. அனைத்து மட்டங்களிலிமுள்ள அரசியல் தலைவர்கள் இதற்கு இசைவாக்கப்படும் போக்கே காணப்படுகின்றது. இந்தியாவில் காணப்படும் கட்சி வேறுபாடுகள் பிராந்திய ரீதியில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளதுடன் தேசிய – மாநில ரீதியிலும் அரசியலில் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

**முடிவுரை**

ஒவ்வொரு தென் ஆசிய நாடும் அரசியல் அபிவிருத்தியை எட்டுவதில் பல பாரிய பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. அவற்றுள் தேசநிர்மாணம் அரச நிர்மாணம், பொருளாதார நிர்மாணம், அரசியலில் பங்குபற்றுதல் போன்ற முக்கியமான சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது.

இந்தியா தேசநிர்மாணப் பணியின் ஊடாக அரசியல் அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்காக மதச்சார்பின்மை, ஜனநாயகம், சமஷ்டிவாதம், சமதர்மம் போன்றவற்றின் ஊடாக தன் முன்னால் எதிர்நோக்கும் சவால்களை வெற்றி கொள்ளலாம் எனக்கருதிக்கொள்ள இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் மத்திமயப்படுத்தப்பட்ட மற்றும் நிருவாக அரசியல் முறைமையின் மூலம் இவற்றை அடைந்து கொள்வதற்கு முயற்சிகளை எடுத்து வருகின்றன. ஆகவே இந்நாடுகளில் தேசிய ஒருமைப்பாடு ஊடாக அரசியல் அபிவிருத்தியைக் கொண்டு வருவதற்கு மிகச் செறிவான நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய கடமைப்பாடு அந்நாடுகளின் அட்சியாளர்களின் கைகளிலேயே காணப்படுகின்றது. இதன் முதல் நடவடிக்கையாக இச்சிறுபான்மையினர் அரசியலில் பாரியளவு பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதற்காக தீர்மானம் மேற்கொள்ளும் கட்டமைப்பிலும் அரச துறைக் கட்டமைப்பிலும் பாரிய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டிய அவசியமும் காணப்பட்டது. மேலும்

கட்டமைப்பு ரீதியிலான மாற்றமும் ஆட்சியாளர்களின் மனதில் ஏற்படும் மாற்றமும் தென் ஆசியாவின் தேசங்களைக் கட்டியெழுப்புவதில் நிரந்தரமான பங்களிப்புக்களை வழங்க முடியும். இங்கு கட்டமைப்பு ரீதியான மாற்றத்தில் பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகத்தைக் கொண்டு வரும் நடவடிக்கையாகக் காணப்பட இலங்கையில் பல்லின மக்களும் அரசியல் தீர்மானம் மேற்கொள்கையில் வாய்ப்பளிக்கக் கூடியவாறு சமஷ்டியையொத்த ஆட்சிமுறை கொண்டு வரப்பட வேண்டியது அவசியமாகும். அதாவது பெரும்பான்மை மக்களின் சர்வாதிகார ஆட்சிமுறை ஒழிக்கப்படுவதன் மூலம் சகல இனத்தவரும் அரசியலில் பங்கு பெறுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். கடைசியாக அரசியல் அதிகாரங்களை பன்முகப்படுத்துவதன் மூலம் குறிப்பிட்ட சமூகத்தில் வாழும் சிறுபான்மையினர் தமது பிரதேசத்தின் அபிவிருத்தியில் முக்கிய பங்கினையாற்றுவதன் மூலம் தேசிய அபிவிருத்திக்குப் பங்காற்ற முடியும். இது அவர்களின் சமூக, பொருளாதரா, கலாசார ஏற்றத் தாழ்வினையும் பெருமளவு குறைக்கும் வழிமுறையாகும். எனவே பன்முகப்படுத்தப்பட்ட சமூகமான தென் ஆசிய பிராந்திய நாடுகள் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை காலம் தாழ்த்தாது துரிதமாக மேற்கொள்வதன் மூலம் அரசியல் அபிவிருத்தியில் முன்னணி நாடுகளாக எதிர்காலத்தில் திகழலாம்.

**Reference**

1. Wilson, A.J., & Dalton, D. (1982). the state of South Asia problems of nation integration. London: C Harst & company. pp. 89-110.
2. Margam, 1(01). 01 April 1992, Colombo. pp. 33-37.
3. Economic Review. (1991, July / Aug). Colombo. pp. 20-45.
4. Smith B.C. (1996). Understanding third world politics theories of political change and development. London: Macmillan press. pp. 275-278.
5. Hassan, S. (1993). Problem of national satiability in South Asia in sexton Ukodokara (ed) External compulsion of South Asian politics. New delhi: Sage pub. pp. 246-286.
6. Ahamar, M. (1996). Ethnicity and state power in Pakistan the Karachi crisis in Asian Survey, 36(10), 1031-1048.